**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**21 |
| Name | : | **தாமரைச்செல்வி** |
| Husband Name | : | முத்துகுமார் |
| Address | : | செட்டிக்குளம் |
| Age | : | 38/2025 |

**தேதி : 15.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் செட்டிக்குளத்திலுள்ள தனியார்பள்ளியில் சிறப்பு ஆசிரியராக வேலை செய்துவருகிறேன். எதிரி வசந்தியை எனக்கு தெரியும். அவர் எங்களது பள்ளியில் உள்ள பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் தலைவராக இருந்தார். அ.சா.15 முதல் அ.சா.20 வரை தெரியும். மேலும் எதிரி எனக்கு லோன் வாங்கி கொடுத்த வகையில் பழக்கம். எதிரி தனது மாமனாரின் மருத்துவ செலவிற்காக லோன் வாங்கி தருமாறு கூறியதால்நான் ரூ.1,59,394/-ஐ Equitas மற்றும் ஆசிர்வாத் ஆகிய நிதி நிறுவனங்களிலிருந்து கடனாக பெற்றுக்கொடுத்தேன். மேற்படி கடனுக்கான தவணைகளை எதிரியே செலுத்திவிடுவதாக சொன்னதை நம்பி நான் எதிரிக்கு கடன் வாங்கிகொடுத்தேன். எதிரி ஒரு சில தவணைகளை மட்டும் கட்டினார். அதன்பிறகு கட்டாததால் நிதி நிறுவனத்தினர் வீட்டிற்கு வந்து கடன் தொகைகளை கட்டுமாறுமிரட்டினார்கள். தற்போது நான்தான் தவணை தொகைகைள கட்டிவருகிறேன். **Equitas நிதி நிறுவனத்தின் கடன்**

**அட்டை நகல் அ.சா.ஆ. 50 ஆகவும், ஆசிர்வாத் நிதி நிறுவனத்தின் கடன் அட்டை நகல் அ.சா.ஆ.51 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** அசல் கடன் அட்டைகள் என்னிடம் உள்ளது. காவல் நிலையத்தில் சத்தியா என்பவர் புகார் கொடுத்தார். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

எதிரி வசந்தியும் நானும் ஒரே ஊர். வசந்தியை எனக்கு 10 வருடமாக தெரியும். இந்த லோனுக்கு முன்பே எதிரி என்னிடம் இரண்டு லோன்கள் வாங்கி கொடுத்து சரியான முறையில் கட்டியுள்ளார். எதிரியிடம் இரண்டு கடன்கள் பெற்று Equitas ல் ரூ.55,000/-மும், ஆசிர்வாத்தில் ரூ.80,000/-மும் வாங்கி கொடுத்தேன். முதலில் வீடு கட்டுவதற்காக வாங்கினார். இரண்டாவதாக மாமனாருக்கு உடல்நிலை சரியில்லை என்று வாங்கினார். முதல் லோன் பிப்ரவரில மாதம் 2023 வருடமும், இரண்டாவது லோன் 2024ம் வருடம் ஏப்ரல் மாதமும் வாங்கி கொடுத்தேன். எதிரி ஆசிர்வாத்தின் வாங்கிய முதல் லோனில் ஐந்து தவணைகளும், இரண்டாவது Equitas லோனில் ஒரு தவணையும் கட்டியுள்ளார். எதிரி சரியாகத்தான் தவணைகளை கட்டிவந்தார் என்றாலும், நாங்கள் 39 பேரும் ஒரே நேரத்தில் சென்று பணம் கேட்டதால் தவணை தொகையை எதிரியால் கட்டமுடியவில்லை என்றால் சரியல்ல. எதிரி ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் வாங்கிய கடன் தொகைகளை திரும்ப செலுத்தினால் வாங்கிகொள்வோம். எதிரி என்னை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடனும், மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணமும் கிடையாது என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.